அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 09/2026

எனது இலக்கம் : EST-6/03/LEA/1060(i)
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2026.03.17

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும்
நியதிச் சட்டச் சபைகளின் தலைவர்கள்

**<u>மத்திய கிழக்கு பிராந்தியத்தில் உருவாகியுள்ள யுத்த மோதல்கள் காரணமாக எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய எரிபொருள் விநியோகச் சிக்கல்களைக் கருத்திற்கொண்டு, அதற்கு முகம்கொடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்</u>**

அரச அலுவலகங்களை சாதாரண முறையில் நடாத்திச் செல்லும் போது உத்தியோகத்தர்களின் போக்குவரத்து நடவடிக்கைகளுக்காகவும், அலுவலகங்களைத் திறந்து வைத்திருப்பதற்காகவும் கணிசமான அளவு எரிபொருள் பயன்படுத்தப்படுகின்றது. அதன் பிரகாரம், மத்திய கிழக்கு பிராந்தியத்தில் உருவாகியுள்ள யுத்த மோதல்கள் காரணமாக எதிர்காலத்தில் எரிபொருள் விநியோகிப்பதில் நிச்சியமற்ற நிலைமை ஏற்படின், அதற்கு முகம் கொடுப்பதற்காக தற்போது நிலவும் எரிபொருள் இருப்புகளைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும் என்பதுடன், அந்நிலைமையினைக் கருத்திற்கொண்டு அத்தியாவசிய சேவைகளுக்கு அதிகமான இடமொன்றினை வழங்குவதற்காக அரச அலுவலகங்களை நடாத்திச் செல்வது தொடர்பில் பின்வருமாறு நடவடிக்கை எடுப்பதற்கு 2026.03.16 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

02. மீண்டும் அறிவிக்கும் வரை ஒவ்வொரு வாரமும் புதன்கிழமை அரச அலுவலகக் கடமைகளுக்கான விடுமுறை தினமாகக் கருதப்படல் வேண்டும். அதன் பிரகாரம், புதன்கிழமைகளில் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் கடமைகளை அவ்வாரத்தின் செவ்வாய்க்கிழமைகளில் மேற்கொள்ளுதல் வேண்டும். அவ்வாறாயினும், ஏதேனும் உத்தியோகத்தரொருவர் அன்றைய தினத்தில் சேவையில் ஈடுபடுத்த வேண்டுமென தாபனத் தலைவர் தீர்மானிப்பார் எனில், உரிய உத்தியோகத்தர்களைச் சேவைக்கு அழைப்பதற்கு இது தடையாக அமையக்கூடாது என்பதுடன், அதற்கான விடுமுறை தினச் சம்பளம், மேலதிக நேரம் அல்லது ஈடுசெய் விடுமுறைகள் வழங்கப்படல் கூடாது.

03. உத்தியோகத்தரொருவரை சேவை நிலையத்திற்கு அழைக்காது, அவருக்கு பொறுப்பாக்கப்பட்டுள்ள கடமைகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான தாபன ரீதியான தொழில்நுட்ப வசதிகள் ஏற்கனவே காணப்படுகின்ற திணைக்களங்களின் தலைவர்களுக்கு/ அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபை தலைவர்களுக்கு அவ்உத்தியோகத்தரின் சேவையை, அவரை சேவை நிலையத்திற்கு அழைக்காது பெற்றுக்கொள்வதற்கான வேலைத்திட்டமொன்றினை தயாரித்துக்கொள்ள முடியும்.

04. அத்தோடு, புதன்கிழமைகளில் மூடப்படும் அலுவலகங்களின் உத்தியோகத்தர்களை, அவ்வாரத்தின் சனி, ஞாயிறு அல்லது அரச விடுமுறை தினமொன்றில் மேலதிக நேரக் கொடுப்பனவு அடிப்படையிலோ, விடுமுறை தின சம்பள அடிப்படையிலோ அல்லது ஈடுசெய் விடுமுறை வழங்கும் அடிப்படையிலோ சேவையில் ஈடுபடுத்தப்படக் கூடாது.

05. அவ்வாறிருந்த போதிலும், சேவையின் அவசரத் தேவையின் அடிப்படையில் சனி, ஞாயிறு அல்லது அரச விடுமுறை தினமொன்றில் தமது தாபனத்தின் உத்தியோகத்தர்களைச் சேவைக்கு அழைப்பதற்கானத் தேவையொன்று ஏற்படுமாயின், உரிய அமைச்சின் செயலாளரின்/ மாகாண பிரதம செயலாளரின்/ திணைக்களத் தலைவரின்/ அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபை தலைவர்களின் அனுமதியுடன் உரிய தாபனத் தலைவருக்கு அவ்உத்தியோகத்தர்களைச் சேவைக்கு அழைப்பதற்கு தடையொன்றில்லை. அவ்வாறு சேவைக்கு அழைக்கப்படும் உத்தியோகத்தர்களுக்காக மேலதிக நேரக் கொடுப்பனவு, விடுமுறை தின சம்பளம் அல்லது ஈடுசெய் விடுமுறை வழங்குவதற்கு எவ்வித தடையும் இல்லை. மேலும், டிட்வா சூறாவளி காரணமாக ஏற்பட்ட அனர்த்தங்களுக்குரிய உத்தியோகபூர்வ கடமைகளுக்கு தேவையான உத்தியோகத்தர்களை அழைப்பதற்கான அதிகாரம் உரிய மாவட்டச் செயலாளர்களுக்கு பொறுப்பாக்கப்படும்.

06. நீதித்துறையினைச் சார்ந்த தாபனங்களுக்கு உத்தியோகத்தர்களைச் சேவைக்கு அழைப்பது தொடர்பான அவசியமான அறிவுறுத்தல்கள் நீதிச் சேவை ஆணைக்குழுவின் மூலம் வழங்கப்படும்.

07. கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் கீழ் நிலவும் பாடசாலைகள் உட்பட கல்வி நிறுவனங்களை இக்காலப்பகுதிக்குள் நடாத்திச் செல்வது தொடர்பான அவசியமான ஆலோசனைகள் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளரின் மூலம் வழங்கப்படும்.

08. அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளுக்கு உரிய இச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் போது ஏதேனும் பிரச்சினையொன்று ஏற்படின், அது தொடர்பில் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளரிடம் வினவி, அவ் ஆலோசனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

09. மேலும், அரச நிறுவனங்களில் விழாக்கள், கருத்தரங்குகள் போன்றவற்றை ஒழுங்கமைப்புச் செய்வதைக் நிறுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். இங்கு, அரச செலவினங்களைக் முகாமைத்துவம் செய்வதற்காக மின்சாரம் மற்றும் எரிபொருளைச் சிக்கனமாகப் பயன்படுத்துவது தொடர்பாக வெளியிடப்பட்ட 2022.03.08 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 04/2022 தொடர்பிலும் அவதானத்தை செலுத்தி நடவடிக்கை எடுக்குமாறு மேலும் வலியுறுத்துகின்றேன்.

10. மேலும், அரசின் அத்தியாவசிய சேவைகளை நடாத்திச் செல்வதற்கு இதனூடாக தடையொன்று ஏற்படக்கூடாது என்பதுடன், அவ் அத்தியாவசிய சேவைகளை வழங்கும் தாபனங்களைப் போன்று அமைச்சின் செயலாளரொருவரினால்/ மாகாண பிரதம செயலாளரொருவரினால்/ அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபை தலைவரின் மூலம் புதன்கிழமைகளில் திறந்து வைக்கப்படல் வேண்டுமெனத் தீர்மானிக்கப்படும் தாபனங்களுக்காகவும் இச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை உரித்தாக்கிக் கொள்ளக் கூடாது. அத்தாபனங்கள் இத்தினத்தினைச் சாதாரண கடமை நாளாகக் கருதி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அத்துடன், தற்போது சுழற்சி முறையின் கீழ் உத்தியோகத்தர்களைச் சேவையில் ஈடுபடுத்தியுள்ள அரச தாபனங்களுக்கு இச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை உரித்தாக்கிக் கொள்ளக் கூடாது.

ஒப்பம்./ எஸ். ஆலோகபண்டார
செயலாளர்
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு

தொலைபேசி இலக்கம் : 011-2699399
தொலைநகல் இலக்கம் : 011-2692158
மின்னஞ்சல் முகவரி : ad-6-est@pubad.gov.lk